DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**S.T.C.495/2018**

| Deposition of the | : | PW2 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | நாகேந்திரன் | Age | : | 53 |
| F/N | : | பாண்டி | Occupation | : | பைனான்ஸ் தொழில் |
| Village | : | கெந்தமாதன பருவதம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 21-st day of July 2023.

**21.07.2023**

**(புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர்)**

**குறுக்கு விசாரணை**

1. நாங்கள் இராமேஸ்வரத்தில் நான்கு, ஐந்து தலைமுறைகளாக குடியிருந்து வருகிறோம். புகார்தாரர் மற்றும் எதிரி ஆகிய இருவரையும் எனக்கு நன்கு தெரியும். புகார்தாரர் மற்றும் எதிரிக்கு இடையே உள்ள உறவுமுறை எனக்கு நன்கு தெரியும். புகார்தாரர் மற்றும் எதிரி அண்ணன், தம்பி உறவுமுறை ஆவார்கள். புகார்தாரர் மற்றும் எதிரி இரத்த உறவா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இராமேஸ்வரத்தில் நான் பைனான்ஸ் மற்றும் கூல்ரிங் கடை வைத்துள்ளேன். பைனான்ஸ் தொழில் நடத்துவதற்கு நான் உரிமம் வைத்துள்ளேன். அந்த நிறுவனத்தின் பெயர் பிரகாஷ் பைனான்ஸ் ஆகும். மேற்படி பைனான்ஸ் தொழிலை நான் 15 வருடங்களான நடத்தி வருகிறேன். மேற்படி தொழில்களை நான் செய்வதற்கு டின் நம்பர் தேவை என்றால் டின் நம்பர் தேவையில்லை நகராட்சி உரிமம் மட்டும் போதும். உரிமம் பெறுவதற்கு டின் நம்பர் அவசியம் இல்லை. நான் வருடா வருடம் வருமான வரி கணக்கு செலுத்துவேன் என்றால் சரிதான்.

2. புகார்தாரர் மகாலிங்கத்திற்கு நான் 10, 15 வருடங்களாக பணம் கொடுத்து வாங்கி வருகிறேன் என்றால் எப்போதாவது கேட்கும்போது கொடுப்பேன். அவருக்கு பணம் கொடுக்கும் சமயத்தில் நான் எழுத்து மூலமாக அவரிடம் எழுதி வாங்கிய பின்பு தான் பணம் கொடுப்பேன் என்றால் சரியல்ல, கைமாத்தாக கொடுப்பேன். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ரூ.10 லட்சம் கொடுத்த தேதி எனக்கு தெரியும். மற்ற பணம் கொடுத்த தேதிகள் சரியாக ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ரூ.10 லட்சம் கொடுத்தற்கு மகாலிங்கத்திடம் எழுத்து பூர்வமாக எந்த ஒரு ஆவணமும் நான் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ரூ.10 லட்சத்திற்குண்டான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் புகார்தாரரிடம் கொடுத்த ரூ.10 லட்சத்தை 2018 ம் ஆண்டு தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் புகார்தாரரிடம் ரூ.10 லட்சம் தரவில்லை என்றாலும், அதனால் தான் அந்த பணத்தை நான் வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. எனது நிறுவனத்தின் மூலம் கொடுத்த மற்ற கடன்களை நான் வருமான வரி கணக்கில்

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2019ம் ஆண்டு தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் ரூ.10 லட்சம் எனக்கு வர வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

4. எனது வருமான வரி கணக்கை எடுத்து பார்த்தால் 2018ம் ஆண்டு ரூ.10 லட்சத்திற்கு மேல் எனக்கு வருமானம் வந்துள்ளது என்ற விபரம் தெரிய வரும் சரிதான். 2018ம் ஆண்டு நான் புகார்தாரருக்கு கொடுத்த ரூ.10 லட்சத்தை எனது வருமான வரி கணக்கில் சேர்க்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் புகார்தாரர் எனக்கு அந்த தொகையை திருப்பி இதுநாள் வரை தரவில்லை அதனால் சேர்க்கவில்லை. என்னிடம் வாங்கிய ரூ.10 லட்சத்தை புகார்தாரர் எதிரி நம்புராஜன் என்பவரிடம் கொடுத்தார். நம்புராஜன் பணம் கேட்கிறார் என்று சொல்லி தான் புகார்தாரர் என்னிடம் ரூ.10 லட்சம் கேட்டார். புகார்தாரர் நம்புராஜிடம் பணம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். புகார்தாரர் நம்புராஜிடம் காசோலையை வாங்கி கொண்டு மேற்படி பணத்தை கொடுத்தார். அந்த காசோலையை புகார்தாரர் என்னிடம் காட்டவில்லை.

5. காசோலையை தவிர மற்ற ஆவணங்கள் ஏதேனும் புகார்தாரர் எதிரியிடம் இருந்து வாங்கினாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நானும், புகார்தாரரும் நல்ல நண்பர்கள் என்றால் சரிதான். புகார்தாரர் என்ன தொழில் செய்கிறார் என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அவர் ரியல் எஸ்டேட் மற்றும் ஏஜென்சி தொழில் செய்து வருகிறார். புகார்தாரர் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் மற்ற நபர்களுக்கு எதிராக மூன்று காசோலை வழக்குகள் நடத்தி வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், புகார்தாரர் சொல்லி தான் தெரியும் என்றாலும் சரிதான். புகார்தாரர் இவ்வழக்கின் காசோலையை எந்த வங்கியில் செலுத்தினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு இவ்வழக்கின் காசோலையின் விபரத்தை பற்றி தெரியாது என்றாலும், புகார்தாரர் கேட்டு கொண்டதால் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**